## 28.43 உயர்மட்டக்குழுவின் அறிக்கை – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை குறித்த பரிந்துரைகள் – கூடுதல் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் பகிர்ந்தளிப்பது

ஆதி திராவிடர் (ம) பழங்குடியினர் நலத் (ஆதிந 1) துறை

அரசாணை (நிலை) எண். 85 — நாள் : 14.07.1999

படிக்க :

1. அரசாணை (நிலை) எண் 77, ஊரக வளர்ச்சி துறை, நாள் 25.04.1998
2. ஊரக வளர்ச்சி செயலாளரின் நேர்முக கடிதம் எண் 14532/சி4/99 நாள் 11.05.1999

**ஆணை**

1. இந்திய அரசியலமைப்புச் சட்டம் அட்டவணை 2ல் மாநில அரசுகள் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்க வேண்டிய உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் குறித்து 29 இனங்களைக் குறிப்பிட்டுள்ளது. அதன்படி முதற்கட்டமாக மாநில திட்டக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 'ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்' என்ற இனம் குறித்து மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள், பொறுப்புகள் ஒப்படைப்பு செய்து பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசு ஆணையில் ஆணை வெளியிடப்பட்டது.

2. இரண்டாவது கட்டமாக மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்க அரசுக்கு பரிந்துரை செய்ய உயர்நிலைக்குழு அமைக்கப்பட்டது. அக்குழு தனது அறிக்கையை 11.01.1999 அன்று அரசுக்கு அளித்தது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சித் துறைச் செயலாளர், மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவது குறித்து உயர்நிலைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பாக அரசு மேற்கொண்ட முடிவுகள் குறித்த அறிக்கையினை அனுப்பி, தேவையான தொடர் நடவடிக்கை மேற்கொண்டு ஆணையிடும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

4. அதன்படி உயர்நிலைக்குழு அறிக்கையில் இயல் 3 "27 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்" சார்பான பரிந்துரைகள் இவ்வாணையில் இணைப்பு 1ல் கண்டவாறு, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் உரிமைகள் அளித்தும். 'ஆய்வு, கண்காணிப்பு மற்றும் ஆலோசனை பற்றிய கூடுதல் பொறுப்புகளை ஊராட்சி ஒன்றியங்களுக்கு இணைப்பில் குறிப்பிட்டவாறு அளித்தும் அரசு ஆணையிடுகின்றது.

5. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இவ்வாணையின் நகலை, தமக்குக் கீழுள்ள மாவட்ட ஊராட்சித் தலைவர், ஊராட்சி ஒன்றியத்தலைவர் மற்றும் கிராம ஊராட்சி தலைவர்களுக்கும் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கு.சம்பத்குமார்**
அரசு செயலாளர்

## 28. DEVOLUTION OF POWERS

### இணைப்பு – 1

### கிராம ஊராட்சிகள்

1. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் கல்வி மற்றும் எழுத்தறிவு நிலைகளை மதிப்பீடு செய்து, புள்ளி விவரங்களைத் தொகுத்து, ஊராட்சி ஒன்றியத்திற்கு அனுப்புதல்.
2. பள்ளிக்கு செல்வதை பாதியில் விட்டுவிட்டவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க உதவுதல்.
3. ஊரக பகுதிகளில் பள்ளி குழந்தைகளுக்காக செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளுக்கு உதவுதல்.
4. குறைந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு, சிறப்புப் பயிற்சி நடத்துவதில் உதவுதல்.
5. குறைந்தபட்ச எழுத்தறிவுத் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் பழங்குடி பிரிவை சேர்ந்த மாணவர்கள் பயன்பெறுவதில் உதவி செய்தல்.
6. பள்ளிகளுக்கு தண்ணீர் வசதியுடன் கூடிய கழிவறைகள் கட்டுதல், குடிநீர் வழங்கல், வகுப்பறைகள், கற்பிப்பு உதவி பொருட்கள், அறிவியல் பரிசோதனைக் கூடங்கள் ஆகிய அடிப்படை சாதனங்கள் மற்றும் உள்ளமைப்பு வசதிகளையும் அளிக்க ஊராட்சி ஒன்றியங்களுக்கு உதவுதல்.
7. தொழில் பயிற்சியளிப்பதற்காக ஊராட்சியில் உள்ள தகுதியான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களைக் கண்டறிந்து அப்பட்டியலை ஊராட்சி ஒன்றியத்திற்கு அனுப்புதல்.
8. புதிய பள்ளிகள் மற்றும் விடுதிகள் கட்டுவதற்குத் தேவையான விவரங்களை வழங்குதல்.
9. தற்பொழுதுள்ள பள்ளிகளை உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்த உதவுதல்.
10. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வீட்டு மனைகளுக்குத் தேவையான நிலத்தைக் கண்டறிந்து கையகப்படுத்த தனி வட்டாட்சியர்களுக்கு (ஆதிதிராவிடர் நலம்) தகவல் அளித்தல்.
11. ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு தெருவிளக்கு அமைத்தல், குடிநீர் வழங்குதல், மின்சாரம் வழங்குதல், சாலைகள் அமைத்தல் போன்ற திட்டங்களை செயல்படுத்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு உதவுதல்.
12. ஊக்கத் தொகை மற்றும் கடன் பெறுவதற்காக பயனாளிகளைத் தேர்ந்தெடுக்க உதவுதல்.
13. சுய வேலை வாய்ப்பு, தனி நபர் தொழில் முனைவோர் மற்றும் குழு நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவைச் சேர்ந்த பயனாளிகளைக் கண்டறிவதுடன் இத்திட்டத்திற்கான நிதியை முறையாகச் செலவிடுவதற்கு உதவி செய்தல்.
14. 1955 ஆம் ஆண்டு குடியுரிமை பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989 ஆம் ஆண்டு வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்படி பொது குடிநீர் வழங்குதல், சுடுகாட்டினை பயன்படுத்துதல், தேநீர் கடைகளில் இரட்டைக் குவளை முறையை பயன்படுத்துதல், வழிபாட்டுத் தலங்களில் செல்லத் தடை, முடிதிருத்துபவர், சலவையாளர் பணிகளைச் செய்ய மறுத்தல், திருமண ஊர்வலம் செல்லத் தடை செய்தல் போன்ற சமூக கொடுமைகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படாமல் தடுக்க காவல் துறைக்கு தகவல் அனுப்புதல்.
15. 1995 ஆம் ஆண்டு குடியுரிமை பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989 ஆம் ஆண்டு வன்கொடுமை தடுப்புச் சட்டங்கள் பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
16. தீண்டாமையை ஒழிப்பதற்கு சமூக ஆதரவையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்துதல்.
17. நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட நிலங்கள் அவர்களுக்கு உடைமையாக்கப்படுவதை உறுதி செய்ய உதவுதல்.
18. பிணத்தை எடுத்துச் செல்லல், தண்டோரா அடித்தல், புதை குழியைத் தோண்டுதல் முதலிய பணிகளை செய்யுமாறு சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினர் எவரையும் கட்டாயப்படுத்தப்படவில்லை என்பதை உறுதி செய்தல்.
19. கொத்தடிமைத் தொழிலாளர்களைக் கண்டறிந்து மறுவாழ்வு அளிக்கும் திட்டங்களைச் செயல்படுத்துதல்.
20. துப்புரவாளர்கள் மற்றும் அவர்கள் சார்ந்தவர்களின் மறுவாழ்வுத் திட்டத்திற்கான பயனாளிகளை, தொண்டு நிறுவனங்கள் உதவியுடன் கண்டறிதலை கண்காணித்தல் மற்றும் ஆய்வு செய்தல்.
21. மனிதக் கழிவுகளை அகற்றும் பணியிலிருந்து அவர்களை விடுவிப்பதிலும், மறுவாழ்வு அளிப்பதிலும் ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு உதவுதல்.
22. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக நடத்தப்படும் பள்ளிகளையும், விடுதிகளையும் பார்வையிட்டு, சம்பந்தப்பட்ட அலுவலருக்குத் தகவல் அனுப்புதல்.

23. முதலமைச்சர் விருது பெறுவதற்கு தகுதியான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களை கண்டறிதல் மற்றும் இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
24. தொழில் பயிற்சி பெறுவதற்கான தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினரை சார்ந்த பயனாளிகளை கண்டறிதல்.

**ஊராட்சி ஒன்றியங்கள்**

25. கிராம ஊராட்சியிலிருந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கிடையே உள்ள கல்வி நிலைப் பற்றி மதிப்பிட்டு, அறிக்கைகளைத் திரட்டி அவற்றை ஒருங்கிணைத்து மாவட்ட ஊராட்சிகளுக்கு அனுப்புதல்.
26. குறித்த காலத்தில் பாடநூல்கள், சீருடைகள், படிப்பு உதவித் தொகை ஆகியவை மாணவர்களுக்குக் கிடைக்க உதவி செய்தல்.
27. அரசுப் பள்ளிகள் மற்றும் விடுதிகள் ஆகியவற்றிற்கு அடிப்படை சாதனங்களையும் உள்ளமைப்பு வசதிகளையும் அளிப்பதை உறுதி செய்து, காலமுறைப்படி மறு ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றை சரிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
28. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்காக கையகப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட வீட்டுமனைகளில், வீடு கட்டுவதற்கும், வீட்டுமனை மற்றும் அடிப்படை வசதி அளிப்பதற்காக பல்வேறு துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஒருங்கிணைப்பதில் உதவி புரிதல்.
29. பொருளாதார மேம்பாடு மற்றும் கடனுதவிக்கான திட்டங்கள் முறையாக செயல்படுத்துப்படுவதை மேற்பார்வையிடுதல் மற்றும் பழங்குடியினருக்காக செயல்படுத்தப்படும் சுய வேலை வாய்ப்பு திட்டம் ஒன்றிய அளவில் செயல்படுத்துவதில் உதவி புரிதல்.
30. பழங்குடியினர் வளர்ச்சிக்கான அடிப்படை வசதி மேம்பாட்டு திட்டங்களை, தயாரித்தல் மற்றும் சுயவேலை வாய்ப்பு மற்றும் ஊதிய வேலை வாய்ப்பு, ஊரக துப்புரவுத் திட்டங்கள் முதலியவற்றிற்கு ஒதுக்கப்படும் நிதி முறையாக பயன்படுத்தப்படுகின்றதா என்பதை மேற்பார்வையிடுதல்.
31. திட்டம் செயலாக்கம் குறித்து காலமுறைப்படி ஆய்வுக் கூட்டங்களை நடத்தி குறைகளைக் கண்டறிந்து, அவற்றைச் சரி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
32. வட்டார அளவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு சிறப்புப் பயிற்சி அளித்து பயிற்சித் திட்டங்களின் பயன்களை மதிப்பீடு செய்ய, காலமுறைப்படி ஆய்வுக் கூட்டங்களை நடத்துதல்.
33. தீண்டாமையை ஒழித்தல் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான கொடுமைகளை தடுக்க, காவல்துறைக்கு உதவி செய்தல்.
34. 1989 ஆம் ஆண்டு வன்கொடுமை தடுப்புச் சட்டம் மற்றும் 1995 ஆம் ஆண்டின் குடியுரிமை பாதுகாப்பு சட்டம் பற்றி விழிப்புணர்வு முகாம் நடத்துதல் மற்றும் ஒவ்வொரு ஆண்டும் சனவரி 24 முதல் 30 முடிய மனித நேய வார விழா கொண்டாடுவதை உறுதி செய்தல்.
35. ஒடுக்கப்பட்டவர்களுக்கு இலவச சட்ட உதவி கிடைக்க உதவுதல்.
36. 1955 ஆம் ஆண்டு குடியுரிமை பாதுகாப்பு சட்டம் மற்றும் 1989 ஆம் ஆண்டு வன்கொடுமை தடுப்பு சட்டம் ஆகியவை ஆதிதிராவிடர் பழங்குடியினர்களுக்கு அளித்துள்ள சட்டபூர்வமான பாதுகாப்புகளைப் பரப்புதல்.
37. கொத்தடிமைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை மதிப்பீடு செய்து மாவட்ட ஊராட்சிகளுக்கு அறிக்கை அனுப்புதல்.
38. 1976 ஆம் ஆண்டு கொத்தடிமை ஒழிப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து தொடர் கண்காணிப்பு செய்தல்.
39. கொத்தடிமைத் தொழிலாளர்கள் பற்றிய மதிப்பீடு அறிக்கையை திரட்டி, 1976 ஆம் ஆண்டு கொத்தடிமை முறை (ஒழிப்பு) சட்டத்தின்படி மறுவாழ்வு நடவடிக்கைகள் செயற்படுத்துவதை மேற்பார்வையிடுதல்.
40. கிராம அளவில் துப்புரவாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்துள்ளவர்களுக்கான மேற்கொள்ளப்படும் மறுவாழ்வு நடவடிக்கைகளை மேற்பார்வையிடுதல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
41. மேற்கண்டவர்களுக்கு தடையின்றி திட்டங்களின் பலன்கள் கிடைப்பதைச் சரிபார்க்க அடிக்கடி ஆய்வுக் கூட்டங்களை நடத்துதல்.

42. 3 முதல் 6 வரையிலான வகுப்பில் படிக்கும் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த மாணவர்களின் கல்வியறிவை மேம்படுத்த உள்ள சிறப்பு ஊக்கத் திட்டத்தை மேற்பார்வையிடுதல்.

43. ஆதிதிராவிடர் மாணவர்கள் கல்லூரிப் படிப்பைத் தொடர்வதற்கு முதலமைச்சர் விருது குறித்து, மாணவர்களுக்கிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

44. தொழில் நுட்ப பயிற்சி அளிப்பதற்கான திட்ட செயலாக்கத்தினை ஆய்வு செய்தல்.

**மாவட்ட ஊராட்சிகள்**

45. ஆதிதிராவிடர், பழங்குடியினர், கொத்தடிமை தொழிலாளர்கள் மற்றும் துப்புரவாளர்கள் ஆகியோர் தொடர்பான விவரங்களை ஊராட்சி ஒன்றியத்திலிருந்து பெற்று ஆண்டறிக்கையை தயாரித்தல்.

46. ஊராட்சி ஒன்றியங்களுக்கு திட்டம் தீட்டுதலில் உதவுதல் மற்றும் தேவையான தொழில் நுட்பம் உதவிகளை அளித்தல்.

47. ஆதிதிராவிடர், பழங்குடியினர் கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் துப்புரவாளர்கள் ஆகியோருக்கு அளிக்கப்படும் பணிகளை ஆய்வு செய்து கட்டாயப்படுத்தி வேலை வாங்கும் முறையை தடுத்து, தேர்ந்தெடுக்கப்பட்ட சார்பாளர்களிடமிருந்து கருத்துக்களையும், உதவிகளையும் பெறுவதற்காக வேண்டி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

48. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வளர்ச்சித் திட்டம் குறித்து, மாவட்ட அளவிலான அடிப்படை விவரங்களின் அடிப்படையில் தகவல் மேலாண்மை மையம் உருவாக்குதல். அதனை மேற்பார்வை செய்தல்.

49. ஆதிதிராவிடர், பழங்குடியினரின் கல்வி நிலை பற்றிய ஆண்டறிக்கையை தயாரித்தல், மேலும் அவர்களுக்குக் கல்வி வசதிகளுக்கு வழிவகை செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்பார்வையிட்டு, காலமுறைப்படி ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி முட்டுக்கட்டைகளை கண்டறிந்து அவற்றைச் சரி செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

50. ஆதிதிராவிடர், பழங்குடியினர்களுக்கு வீடு மற்றும் வீட்டுமனை வசதிகள் அளிக்கப்படுவதையும் அவர்கள் குடியிருப்பிடங்களில் அடிப்படை வசதிகள் செய்து தருவதையும் மேற்பார்வையிடுதல்.

51. ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கான வேலைவாய்ப்புகள் அளிக்கப்படுவதை மேற்பார்வையிடுதல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

52. பயிற்சித் திட்டங்கள், சிறப்புப் பயிற்சித் திட்டங்கள் மேற்பார்வையிடுதல்.

53. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகள் ஊராட்சி ஒன்றியம் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தல்.

54. கொத்தடிமைத் தொழிலாளர்கள் பற்றிய விவரங்களை ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து பெற்று தொகுத்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலருக்கும் அரசிற்கும் அனுப்புதல்.

55. 1976 ஆம் ஆண்டு கொத்தடிமை ஒழிப்பு முறை சட்டத்தின்படி, ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொள்ள மறுவாழ்வு நடவடிக்கைகளுக்கு உதவி செய்வதுடன் ஆலோசனைகளையும் வழங்கலாம். மேலும் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி, இடர்பாடுகள் ஏதுமிருப்பின் அவைகளை களைய உரிய நடவடிக்கை எடுத்தல்.

56. ஊராட்சி ஒன்றிய நிலையில் துப்புரவாளர்கள் நலம் மற்றும் மறுவாழ்வு பற்றி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மேற்பார்வையிடுதல்.

57. ஆதிதிராவிடர் மாணவர்கள் கல்லூரிப் படிப்பைத் தொடர்வதற்காக வழங்கப்படும் முதலமைச்சர் விருது குறித்து அவர்கள் அறிகின்ற வகையில் விளக்குதல்.

58. தொழில் நுட்ப பயிற்சி பெறுவதற்கு உரிய உதவி குறித்து திட்டமிடுதல் மற்றும் பார்வையிடுதல்.

59. பல்வேறு திட்டங்களின் கீழ் வீடுகள் கட்டுதல், வீட்டுமனை மேம்பாட்டினை மேற்பார்வையிடுதல் மற்றும் அது தொடர்பான திட்டமிடுதல்.

60. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவச பாட புத்தகங்கள், சீருடைகள், படிப்பு உதவித் தொகைகள் முதலிய சலுகைகள் குறித்து திட்டமிடுதல் மற்றும் மேற்பார்வையிடுதல்.

## இணைப்பு – 2

## ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஆய்வு, கண்காணிப்பு மற்றும் ஆலோசனை மூலம் வழங்கப்படும் கூடுதல் பொறுப்புகள்

1. இடைநிலைப் பள்ளிகளில் ஆய்வு செய்தல் மற்றும் மாணவர்களுக்கு கல்வி உதவி தொகை, சீருடைகள், நோட்டுப் புத்தகங்கள் ஆகிய அனைத்து திட்டங்களும் சரியான நேரத்தில் வந்தடைகிறதா என்று வட்டாட்சியர், ஆதிதிராவிடர் நலமுடன் ஆய்வு செய்தல், அடிப்படை வசதிகளை தேவையறிந்து மாவட்ட ஊராட்சிகளுக்கு அறிக்கை அளித்தல்.

2. குடியிருப்பு பள்ளிகளில் ஆய்வு செய்தல் மற்றும் மாணவர்களுக்கு கல்வி உதவி தொகை, சீருடைகள், நோட்டுப் புத்தகங்கள் ஆகிய அனைத்து திட்டங்களும் சரியான நேரத்தில் வந்தடைகிறதா என்று வட்டாட்சியர், ஆதிதிராவிடர் நலமுடன் ஆய்வு செய்தல், அடிப்படை வசதிகளை தேவையறிந்து மாவட்ட ஊராட்சிகளுக்கு அறிக்கை அளித்தல்.

**கு.சம்பத்குமார்**
அரசு செயலாளர்